**தலைப்பு 145 – சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 145 - சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஒக்தோபர் 29 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள்

மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் ஏற்பாடுகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அந்த ஏற்பாடுகளுடன் இணக்கம் காணப்படாமை | | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம் 127 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதகைமை**<br>நிதிப்பிரமாணம் | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளை களுக்கு இணங்க இணங்காமல் அல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. | பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்படாமை / போதியளவில் திட்டமிடப்படாமை | 2.1 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் | 1. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.3 |
| | | 2. | இணங்காமைகள் | 2.6 |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கும் முறையொன்று உருவாக்கப்படல் வேண்டும். | 3. மனித வள முகாமைத்துவத்திலான பலவீனங்கள் | 2.7 |
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | 1. குறைநிரப்பு மதிப்பீட்டிலான ஒதுக்கீடுகள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.4 |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பின் பேரில் காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை உரிய கவனத்துடன் செயற்பட்டு அமைச்சின் பரிசோதனைகளுக்கு உட்படுத்துதல் | 1. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறைபாடுகள் | 2.5.2 |
| 127(7) | உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப்பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதற்கும் கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து | 1. நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.2 |

கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைகளுக்கு பொறுப்பாகுதல்.

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவம்வாய்ந்த கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2 வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 62,998,989 தொகையான ஒப்பந்தத்தின் செயலாற்றல் பிணையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புனர்வாழ்வழிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தில் அலுவலகங்களை ஒதுக்கீடு செய்தல் மற்றும் உணவு உண்பதற்கான இடமொன்றை அமைப்பதற்கு பெறுகையொன்றினை மேற்கொள்ளாது ரூபா 757,944 தொகைக்கு ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிராததுடன், பிடிகாசினை அறவிடாது மொத்தப் பணமும் செலுத்தப்பட்டிருந்தது.

### 2.2 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

2012 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் இடம்பெற்ற 03 வாகன விபத்துக்கள் தொடர்பிலான ரூபா 131,328 தொகையான நட்டம் இனங்காணப்பட்டிருந்த போதிலும், பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினமிருந்து அறவிடுவதற்கு 2018 ஒக்தோபர் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முகாமைத்துவ குறைபாடுகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கந்தகாடு பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பகுதியளவு நிரந்தரக் கட்டிடங்கள் 20 உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணித்தல் 90 நாட்களினுள் நிறைவு செய்யப்பட்டிராததுடன், அதற்காக ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 10 சதவீதமான தாமதக் கட்டணத்திற்கு பதிலாக 05 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. இதற்கமைய ரூபா 1,335,288 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட கந்தகக்காடு மருத்துவமனையின் நிர்மாணங்கள் 2018 ஒக்தோபர் வரையிலும் நிறைவுசெய்யப்பட்டிருக்கவில்லை. நிர்மாணத்திற்கு தேவையான ஊழியம் இராணுவத்திடமிருந்து பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அது நிறைவேறியிராமையால் வெளிவாரி ஊழியத்தினை பெற்றுக்கொண்டு ரூபா 2,119,060 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன், அதற்குரிய அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) வவுனியா பூந்தோட்டத்தின் புனர்வாழ்வழிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு ரூபா 3,100,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு தேவையான காணி 2018 ஒப்தோபர் மாதம் வரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டு மற்றும் கடந்த வருடத்தினுள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| 2016 | மீண்டுவருபவை | 955 | 933 | 22 | 2 |
| | மூலதனம் | 16,970 | 13,690 | 3,280 | 19 |
| | **மொத்தம்** | **17,926** | **14,623** | **3,303** | **18** |
| 2017 | மீண்டுவருபவை | 1,015 | 1,003 | 12 | 1 |
| | மூலதனம் | 11,712 | 10,278 | 1,434 | 12 |
| | **மொத்தம்** | **12,727** | **11,281** | **1,446** | **11** |

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமை

செலவின விடயங்களுக்காக இருந்த ரூபா 100,000 தொகையான முழு நிதியேற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

#### (ii) மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை

22 செலவின விடயங்களுக்காக ரூபா 694 மில்லியன் கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், அந்த செலவின விடயங்களுக்குரிய நிதியேற்பாடுகளில் ரூபா 459 மில்லியன் கூட்டுத்தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால், சேமிப்பானது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாட்டின் 22 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### 2.5.1 பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சிற்குரிய 14501 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 9 | 8.9 | 4 | 4.8 | 37 | 15.6 |

### 2.5.2 நிலுவைக் கடன் மீதிகள் அறவிடப்படாமை

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 235,206 ஆகும். அந்த நிலுவைக் கடன் மீதிகளில் 05 முதல் 07 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த இந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவிடும் பின்தொடர் நடவடிக்கை மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

### 2.6 இணங்காமைகள்

### 2.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கமையாத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | |
| | (i) நிதிப்பிரமாணம் 104 | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 11 வாகன விபத்துக்கள் தொடர்பில் ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு சேதமானது ரூபா 2,919,447 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் இறுதிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2010 மே 14 ஆந் திகதிய CA/1/17/1 ஆம் இலக்க | உத்தியேதகபூர்வ தொலைபேசி இணைப்புக்களுக்காக 01 கைத்தொலைபேசியை மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட |

| | |
|---|---|
| சனாதிபதி செயலகச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி | வேண்டிய போதிலும், 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் 03 கைத்தொலைபேசிகள் அமைச்சரின் தனிப்பட்ட பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

### 2.7.1 ஆட்சேர்க்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளனி வேதனம் ஆகியவற்றுக்கான செலவினம்

அலுவலகத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளவாறான பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் மற்றும் மிகை பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்கான தனிநபர் ஊதிய செலவின தொகுதிக்காக ரூபா 97.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 21 | 12 | 09 |
| (ii) | இரண்டாம் மட்டம் | 07 | 03 | 04 |
| (iii) | மூன்றாம் மட்டம் | 106 | 86 | 20 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 37 | 29 | 08 |
| | **மொத்தம்** | **171** | **130** | **41** |

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு 4 சந்தர்ப்பங்களில் அரச நிர்வாக அமைச்சின் செயலாளரிடம் விடுத்த போதிலும், 2018 ஒக்தோபர் வரையிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.